1981 ஜனவரி 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கண்டிஷன்கள் எல்லாம் இடத்திற்கு இடம் மாறுபடும். அவைகளின் எண்ணிக்கை அதிக மாக இருக்கும். அவைகளைச் சொல்லிக் கொண்டிருந்தால் நேரம் தான் வீணாகும். உட்காருங்கள்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்திலே அரசுக்குச் சொந்தமான 400 ஏக்கர் நிலத்தை வைத்திருக்கக் கூடியவர்களைப்பற்றி எல்லாம் சொன்னார்கள். அதேபோல தமிழகத்திலே ஆலயங்களுக்குச் சொந்தமான தரிசாக இருக்கக்கூடிய பல ஏக்கர் நிலங்களையும் இப்படிப்பட்ட முதலாளிகள் வைத்திருப்பதாகத் தெரிகிறது. அந்த நிலங்களை அரசாங்கம் அவர்களிடமிருந்து பெற்று, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு அரசாங்கமே நேரிடையாகக் கொடுக்க உத்தரவு பிறப்பிக்க முடியுமா என்று அறிய விரும்பு கிறேன் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, வனத்துறை சம்பந்தப்பட்ட கேள்விதான் மூலக் கேள்வியாகக் கேட்கப்பட்டிருக்கிறது. அதற் கான பதில்களைத்தான் துணை வினாக்களுக்கும் நான் அளித்து வந்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறநிலையத் துறை பற்றிய கேள்வியைக் கேட்கிறார்கள். தனியாக கேள்வி கேட்டால் தக்க பதில் தர முடியும் என்று தெரிவித்துக் கொள் கிறேன்.

பாப்பாரப்பட்டியில் சுப்பிரமணிய சிவாவுக்கு நினைவுச் சின்னம்.

* வினா எண். 49—திரு. க. இரா. சின்னராசு, திரு. ப. நெடு மாறன்: மாண்புமிகு செய்தி—அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தர்மபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் அமைந் துள்ள தியாகி சுப்ரமணிய சிவா அவர்களின் சமாதியை நினைவுச் சின்னம் ஆக்கும் திட்டம் அரசுக்கு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான முன் நடவடிக்கைகள் எடுக் கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) தர்மபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் உள்ள சுப்பிரமணிய சிவாவின் சமாதியைச் செப்பனிட்டு அங்கு ஒரு நினைவுத் தூண் நிறுவ அரசு முடிவு செய்துள்ளது.

(ஆ) இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி தர்மபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

[முற்பகல் 9-40]

திரு. க. இரா. சின்னராசு : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சுப்பிரமணிய சிவா சமாதியை ஒரு நினைவுச் சின்னமாக்குவதற்கு அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிவித்தார்கள். அதற்காக அந்த மாவட்ட மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக் கொண்டு, அந்தத் திட்டத்தின் அளவு எவ்வளவு என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே இப்போது அதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிற தொகை ரூ. 8,791·46.

திரு. ப. நெடுமாறன் : தியாகி சுப்பிரமணிய சிவா அவர்கள் சமாதி மிகவும் சீர்கேடடைந்த நிலையில் இன்றிருக்கிறது. அவர்கள் பாரதபுரம் என்ற ஊரை எழுப்பி வைத்திருந்தார்கள். அந்தக் கட்டடங்கள் எல்லாம் இன்று இடிந்து கிடக்கும் பரிதாபகரமான நிலையில் இருக்கிறது. ஆகவே அதை முற்றிலும் சீர்திருத்தியமைத்து அங்கே அவர்களது பெயரால் ஒரு மண்டபம் எழுப்ப வேண்டும் என்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, அப்படி ஒரு விரிவான திட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சுமார் ரூ. 3.94 லட்சம் செலவில் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டார்கள். அரசாங்கம் அங்கேயிருக்கிற—தேசிய உணர்வுமிக்க பெருமக்கள் பலர் அங்கேயிருக்கிற காரணத்தால் அதை வசூல் செய்து அரசாங்க நிதியையும் சேர்த்து அதை உருவாக்கலாம் என்ற ஆலோசனையைத் தெரிவித்தது. மாவட்ட ஆட்சித் தலைவர் அது இயலாது என்று தெரிவித்ததையொட்டி இப்போது அந்த இடத்தைத் திருத்தி நினைவுத்தூண் எழுப்புகிற முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது.

திரு. இல. பலராமன் : சுப்பிரமண்ய சிவா அவர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்புவதற்கு அரசு மான்யமாக ரூ. 8,000 ஒதுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இது நாட்டின் விடுதலைக்காகப் போராடிய ஒரு பெரிய தியாகியின் நினைவுச் சின்னம். ஆகவே அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற இந்த மதிப்பீடு மிக மிகக் குறைவு என்று அரசாங்கம் கருதுகிறதா? இந்தத் தொகையை மேலும் உயர்த்த வேண்டும். அவர்கள் போராட்ட காலத்தில் நோய் வாய்ப்பட்டு தொழு

[1981 ஜனவரி 27]

நோயால் பாதிக்கப்பட்டார்கள் என்ற நிலையும் இருக்கிறது. ஆகவே அதைக் கருத்தில் கொண்டு ஒரு மருத்துவமனைக்காவது அவர்களது பெயரை வைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : விடுதலை வீரர் சுப்பிரமண்ய சிவா அவர்களின் தியாகத்தை எடைபோட்டு நிதி ஒதுக்கப்படவில்லை. இருக்கிற வாய்ப்புகள் வசதிகளை வைத்து தான் நிதி ஒதுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த மற்றொரு கருத்து பரிசீலனைக்குரியது. அதை அருள்கூர்ந்து அவர்கள் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களிடம் கேட்பார்களானால் அவர்கள் விரும்புகிற மருத்துவமனைக்குப் பெயர் வைக்கிற ஒரு ஏற்பாட்டையோ அல்லது வேறு அமைப்பு களுக்கு பெயர் வைக்கிற ஏற்பாட்டையோ அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. இரா. சின்னராசு : அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிறபோது ரூ. 8,000 ஒதுக்கபட்டிருப்பதாகச் சொன்னார்கள். பெரிய ஒரு தியாகி, சுதந்திரப் போராட்டத்திற்காக தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட ஒரு தியாகிக்கு நினைவுச் சின்னம் எழுப்புவதற்கு ஒதுக்கப்ட்டுள்ள இந்தத் தொகை மிக மிகக் குறைவு. ஆகவே அந்தத் தொகையை அதிகப்படுத்தி பெரிய அளவில் அவர்களுக்கு நினைவுச் சின்னம் ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி ஏற்கெனவே ஒரு உறுப்பினர் கேட்டாகி விட்டது.

திரு. மு. அம்பிகாபதி ; கப்பலோட்டிய தமிழன் வ. உ.சிதம் பரம் பிள்ளை, மகாகவி பாரதியார் இவர்களுடன் சுப்பிரமணிய சிவா ஒன்றாக நின்று தோளோடு தோளாக நின்று போராடி நாட்டுக்கு விடுதலை வாங்கித் தந்ததன் காரணமாகத்தான் நாம் இங்கே எம்.எல்.ஏ. க்களாக இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் ஒரே காலத்தில் இருந்தவர்கள், தனித்தனியாகப் பிரித்துப் பேசாதீர்கள்.

திரு. மு. அம்பிகாபதி : பாரதி நூற்றாண்டு விழாவினை யொட்டி அந்த மாபெரும் தியாக சீலருக்கு, மாவீரன் சுப்பிர மணிய சிவாவிற்கு அரசாங்கமே நேரடியாக—மாவட்ட ஆட்சித் தலைவர் எழுதினாரா எழுதவில்லையா என்பது அல்ல பிரச்னை- அதை ஒரு சுற்றுலா மையமாக ஆக்குகிற அளவிற்கு பத்து லட்சம் ரூபாய் அளவிற்குத் திட்டம் தீட்டி செய்வதற்கு அரசு முன்வர வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஒரு வேண்டுகோள்.

திரு. ப. நெடுமாறன் : அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 8,000 ரூபாய் ஒதுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். மேற்கொண்டு வசூல் செய்து செய்யலாம் என்ற திட்டத்தையும் அவர்கள் வெளியிட்டார்கள். நாங்கள் பொது மக்களிடமிருந்து ஒரு லட்ச ரூபாய் வசூல் செய்துத்தர தயாராக இருக்கிறோம். அரசாங்கம் ஒரு லட்ச ரூபாய் போட்டு, ஆக இரண்டு லட்சம் செலவில் அந்த மணி மண்டபத்தை எழுப்புகின்ற காரியத்தைச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதலை வீரர் சுப்பிரமணிய சிவா நினைவுச் சின்னம் எழுப்புவதில் நாம் எவ்வளவு செலவழிக்கிறோம் என்பதைப் பற்றி நடைபெறுகின்ற விவாதம் நாம் அவர்களுக்குச் செய்கின்ற மரியாதையாக இருக்காது, என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் பதிலளித்திருக்கிறார்கள். பொதுமக்கள் எல்லாம் இதிலே தங்களுடைய பங்கினைச் செலுத்த முன்வர வேண்டும். அப்படி முன்வருவது அந்த மாவீரருக்கு நாம் செய்கின்ற கடமையும், வீர வணக்கமும் ஆகும். அப்படி முயற்சி எடுத்துக் கொள்கிற போது, அரசு அனைத்து உதவிகளையும் செய்யும் என்கிற அளவிலே மட்டும் இந்த நேரத்திலே உறுதி அளிக்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே சுப்பிரமணிய சிவா அவர்களுக்கு எழுப்புகின்ற இந்த நினைவுச் சின்னத்தினுடைய அளவு அவருடைய தியாகத்தை, அவருடைய தொண்டை வைத்து கணக்கிட்டு அதையே மனதிலே வைத்துப் பார்க்காமல், அமைச்சர் பெருமகனார் அவர் பாரத மாதா கோவில் எழுப்ப வேண்டுமென்று விரும்பிய காரணத்தினாலும், சிறையிலே இருந்த போது தொழு நோயினால் பாதிக்கப்பட்டும் தேசபக்தி தளராத காரணத்தினாலும், தனித் தமிழ் இயக்கத்தை மறைமலை அடிகளுக்கு சற்று முன்னதாகவே ஆரம்பித்துவிட்ட காரணத்தினாலும், இதை எல்லோரும் பார்க்கின்றவகையில் பாரத மாதா கோவில் எழுப்பி, அந்த மணி மண்டபத்தை அவருக்கு நினைவுச் சின்னமாக அளிக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுப்பிரமணிய சிவா அவர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்புகின்ற இந்தப் பொருள் பற்றி மன்ற உறுப்பினர்கள் தெரிவித்த உணர்வுகளின் அடிப்படையில் அரசு இந்தப் பிரச்சினையை ஆராயும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.